திரு. கே. என். குமாரசாமி: முன்பு விவசாயிகளுக்கு பூச்சி மருந்துகளுக்காக 30 சதவிகித மானியம் கொடுத்து வந்தார்கள். தற்போது அந்த மானியத்தை 15 சதவிகிதமாகக் குறைத்து விட்டதோடு உரத்தின் விலையிலும் 10 சதவிகிதம் ஏற்றிவிட்டார்கள். இதனால் விவசாயிகள் அவதிக்குள்ளாகியிருப்பதால், அதை மறுபடியும் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: பூச்சி கொல்லி மருந்துகளுக்கு மானியம் கொடுக்கக்கூடாது என்பது மத்திய அரசாங்கத்தின் உத்தரவு. அப்படி இருந்தும் நம்முடைய மாநிலத்தில் மட்டுந்தான் இன்னும் அதற்கு மானியம் கொடுக்கப்பட்டு வருகிறது. அப்படிக் கொடுத்து வருவதைத் திடீரென்று எடுத்துவிடக்கூடாது என்று படிப்படியாகக் குறைக்க வேண்டுமென்ற அடிப்படையில் விவசாயிகளின் கோரிக்கைக்கு இணங்க 15 சதவிகித மானியம் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. பி. எஸ். மணி: அமைச்சர் அவர்கள் எப்போதும் வெள்ளம் வந்து கொண்டிருப்பதில்லை என்று சொன்னார்கள். இப்போது தஞ்சை ஜில்லாவில் வெள்ளத்தால், தாளடிப் பயிர் முழுவதும் கடலுக்கு அடித்துச் செல்லும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு அரசாங்கம் என்ன உதவி செய்வதாக உத்தேசித்துக் கொண்டிருக்கிறது. முன் கடனைத் தள்ளி புதிய கடனை அவர்களுக்கு கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை நானும் பார்வையிட்டு வந்தேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், உரத்திற்காக 30 ரூபாயும், பூச்சி கொல்லி மருந்திற்காக 10 ரூபாயும் ஏற்கனவே வாங்கியிருந்த கடனை விவசாயிகள் கொடுக்கவில்லை என்றாலும் மேலும் 40 ரூபாய் கடனைக் கொடுக்கலாம் என்று தீர்மானித்து கொடுத்திருக்கிறார்கள். எத்தனை ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்ற சரியான கணக்கை எடுத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு மேலும் எந்த அளவு கடன் கொடுக்கலாம் என்பது பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது.

Extra wages to employees of T.V.S. Group Companies

* 27 Q.—Thiru N. S. V. CHITHAN: Will the Hon. Minister for Labour and Backward Classes be pleased to state—

(*a*) whether any agreement has been reached with the T.V.S. Group and its Labour Union at the instance of Commissioner of Labour for the payment of extra wages; and

(*b*) if so, the particulars thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) டி.வி.எஸ். தொகுதியினருக்கும் அதன் தொழிலாளர்களுக்குமிடையே கூடுதல் ஊதியங்கள் கொடுப்பது குறித்து தொழிலாளர் நல ஆணையர் தலையீட்டிலோ, தொழிலாளர் நல ஆணையரின் முன்னிலையிலோ உடன்பாடு எதுவும் ஏற்படவில்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.